S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE சனி டிசம்பர் 13 * 2025 * மலர் -1 * இதழ்-195* VOL-1 * ISSUE-195 விலை ரூ.3 * பக்கம் -4

## மாதந்தோறும் தலா ரூ.1,000 வழங்கப்படும்:

# கூடுதலாக 17 லட்சம் பெண்களுக்கு உரிமைத் தொகை; முதலமைச்சர் ஸ்டாலின் விழாவில் தொடங்கி வைத்தார்!






சென்னை, டிச.13

தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர்உரிமைத்திட்ட விரிவாக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன்படி கூடுதலாக 17 லட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 வழங்கப்படும். இதைத்தவிர பல்வேறு துறைகளில் சாதனை படைத்த தமிழ்ப் பெண்களையும் சிறப்பித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள இல்லத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்படும் என்று கடந்த சட்டசபை தேர்தலின் போதே தேர்தல் வாக்குறுதியில் தி.மு.க. அறிவித்தது.

அதன்படி 2023–ஆம் ஆண்டு இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக 1 கோடியே 13 லட்சத்து 75,492 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

இந்த திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை என்று பெயர். ஒவ்வொரு மாதமும் 15–ஆம் தேதி இல்லத்தலைவிகளின் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டம் மேலும் விரிவுபடுத்தப்படும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அந்த வகையில் கூடுதலாக 17 லட்சம் பெண்களுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000 வழங்கப்பட உள்ளது.

இந்த திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நிகழ்ச்சியில் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர்உதயநிதிஸ்டாலின் முன்னிலை வகித்தார்.

மேலும் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர் உள்ளிட்டோர் கலந்துகொள்கிறார்கள்.

கலைஞர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் இதுவரைரூ.30,838 கோடி வழங்கப்பட்டுள்ளது. பயனாளர்கள் இந்த நிதியை உணவு, மருந்து, குழந்தைகளின் கல்வி ஆகியவற்றுக்கு பயன்படுத்துகின்றனர்.

90 சதவிகிதத்துக்கும் மேற்பட்ட பெண்கள் சுயசார்பு பெற்றவர்களாக உணர்வதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

இந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வந்த ஓராண்டுக்குப் பிறகு லண்டன் கிங்ஸ் கல்லூரியின் பிரிவான டிக்ஷன் பூன் சட்டப் பள்ளி தமிழ்நாட்டில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தைப் பற்றி ஆய்வு செய்தது.

தமிழ்நாட்டில் தர்மபுரி, நாகப்பட்டினம்,விருதுநகர் ஆகிய மாவட்டங்களில், இந்தத் திட்டத்தால் பயனடைந்த 1,283 பேரிடமும், வேலூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டத்தில் இணையாத 938 பேரிடமும் என மொத்தம் 2,221 பெண்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வில், 99 சதவீதம் பெண்கள் உரிமைத் தொகை பணம் தங்களது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும். உணவு, இதர செலவுகளைவிட மருந்துவ செலவுகளுக்காக அதிகம் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கின்றனர்.

விழாவில் தமிழக அரசின் திட்டங்களால் பயனடைந்த பெண்களின் அனுபவங்கள், பெண்களின் முன்னேற்றம் குறித்து அரசு மேற்கொண்டு வரும் முன்னெடுப்புகள் ஆகியவற்றை எடுத்துக்காட்டும் நிகழ்வும் நடந்தது.

இந்த நிகழ்ச்சிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்குகிறார். துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை வகிக்கிறார்.

மேலும் பத்ம பூஷன் விருது பெற்ற சமூக சேவகி கிருஷ்ணம்மாள் ஜெகநாதன், ஆசியவிளையாட்டில் பூப்பந்து போட்டியில் பங்கேற்றதுளசிமதிமுருகேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



சென்னை மாநகராட்சியில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகளை முன்னிட்டு, சிறப்பு வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ராமன் குமார் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், கூடுதல் மாவட்டத் தேர்தல் அலுவலர்கள் இணை ஆணையர் (கல்வி) கற்பகம், துணை ஆணையர்கள் பிரதிவிராஜ், கட்டா ரவி தேஜா, எச்.ஆர்.கௌஷிக், மாவட்ட வருவாய் அலுவலர் நா. பூஷ்ணா தேவி மற்றும் வாக்காளர் பதிவு அலுவலர்கள், தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம்அரசுசட்டக்கல்லூரிகூட்டரங்கில், மாவட்டமாற்றுத்திறனாளிகள்நலத்துறை சார்பில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகள் தினவிழாவில் மாற்றுத்திறனாளி பாதுகாவலருக்கு சட்டபூர்வ பாதுகாவலர் சான்றினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், வழங்கினார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) ரா.வெங்கடேஷ்வரன், விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை குடிமை மருத்துவர் ரவிக்குமார், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ராஜசேகர் உட்பட பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் நகராட்சியில் அமைந்துள்ள மீனாட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர் களுக்கு திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி தனது சொந்த செலவில் வினா வங்கி அடங்கிய புத்தகங்களை வழங்கி வாழ்த்திப் பேசினார். இந்தநிகழ்ச்சியில்திருப்பத்தூர்நகரகழகசெயலாளர்எஸ்.ராஜேந்திரன்தலைமைவகித்தார். முதன்மை கல்வி அலுவலர், ஒன்றிய குழு துணை தலைவர் ஞானசேகரன், மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆந்திராவில் பஸ் கவிழ்ந்து 10 பக்தர்கள் பலி!

## கோவிலுக்கு சென்று திரும்பிய போது விபத்து!!

அமராவதி,டிச.13–

ஆந்திராவில் பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், 10 பேர் உயிரிழந்த சம்பவம் சோக த்தை ஏற்படுத்தி உள்ளது.

ஆந்திராவின் அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தில் பயணிகள் 35 பேரை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ் திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தாக்கில் கவிழ்ந்தது. தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு மீட்பு படையினர் மற்றும் போலீசார் விரைந்தனர். நீண்ட நேரமாக மீட்பு பணிகள் தீவிரமாக நடந்தது. இந்த விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

மேலும் காயமடைந்த 22 பேர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர் என அல்லூரி சீதாராம ராஜு மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்தார். சித்தூர் மாவட்டத்தை சேர்ந்த பயணிகள், பத்ராசலம் கோவிலில் சாமி தரிசனம் செய்து விட்டு வீடு திரும்பி கொண்டிருந்த போதுவிபத்துநிகழ்ந்தது ள்ளது என்பது விசாரணையில் தெரியவந்தது.

இந்த விபத்து இன்று அதிகாலை நேரத்தில் நிகழ்ந்துள்ளது. நள்ளிரவு நேரம், அதிகாலையில் வாகன பயணத்தை தவிர்ப்பது நல்லது. வாகனம் ஓட்டுபவர், தூக்க கலக்கத்தில் சற்று அசந்தாலும் பெரும் விபத்தில் சிக்க வாய்ப்புள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்தவிபத்துஅதிகாலை நேரத்தில் பயணம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

விபத்து குறித்து ஆந்திரா முதல்வர் சந்திரபாபு நாயுடு சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

அல்லூரி சீதாராம ராஜு மாவட்டம், சித்தூர் அருகே யாத்ரீகர்களை ஏற்றிச்சென்றதனியார் பேருந்து விபத்துக்குள்ளானது என்னை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. இந்த விபத்தில் பலர் உயிரிழந்திருப்பது வருத்தமளிக்கிறது. விபத்து குறித்து அதிகாரிகளிடம் பேசினேன்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உதவிகள் குறித்த விவரங்களையும் அறிந்து கொண்டேன். காயமடைந்தவர்களுக்கு சிறந்த மருத்துவ உதவி கிடைப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளேன். இறந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசு உதவி செய்யும். இவ்வாறு சந்திரபாபு நாயுடு கூறியுள்ளார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தை கண்டித்து டிசம்பர் 15ஆம் தேதி கோவையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## பூசாரிப்பாளையம் வழித்தடம் மூடப்பட்டதை கண்டித்தும் நடவடிக்கை கோரியும் – கோவை மாநகராட்சி கவுன்சிலர் சங்கர் அறிவிப்பு



கோவை,டிச.13

கோவை நகரில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மூடி வைத்திருக்கும் வழித்தடத்தை திறக்க கோரி, வருகின்ற டிசம்பர் 15ஆம் தேதி காலை 10 மணிக்கு பல்கலைக்கழகத்தின் முன்பாக மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளதாக கோவை மாநகராட்சி 74 வது வார்டு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கவுன்சிலர் சங்கர் அறிவித்துள்ளார்.

பூசாரிப்பாளையம் பகுதி மக்கள் கடந்த பல ஆண்டுகளாக தினசரி பயன்பாட்டில் இருந்த வழித்தடம், வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகம் சில மாதங்களுக்கு முன்பு திடீரென மூடி விட்டது. இதன் விளைவாக பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் சுமார் 5 கிலோ மீட்டர் சுற்றி செல்வதற்கேற்ப பெரும் சிரமத்தை எதிர்கொண்டு வருகிறார்கள்.

இந்த வழித்தடத்தை மீண்டும் மக்கள் பயன்பாட்டிற்காக திறக்க வேண்டும் என பல முறை கோரிக்கை விடுத்தும், மாவட்ட நிர்வாகத்திடம் மனுக்கள் அளித்தும் இதுவரை எந்த தீர்வும் காணப்படவில்லை என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் கட்சி மாநில தலைவர் மற்றும் மாநில கணக்கு குழு தலைவர் செல்வ பெருந்தகை தலைமையில் நடந்த மாவட்ட கணக்கு குழுக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டதாகவும் சங்கர் தெரிவித்தார்.

மக்களின் அடிப்படை தேவையைக் குறிக்கும் இந்த வழித்தடத்தை மீண்டும் திறக்க அரசு மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் வேகமான நடவடிக்கை எடுக்க வேண்டியதிருப்பது மக்களின் கடும் மனவேதனையை உருவாக்கியிருக்கிறது என்று அவர் கூறினார்.

மேலும், இது குறித்து பூசாரிப்பாளையம் பகுதியைச் சேர்ந்த தலித் மக்களின் சார்பில் கடந்த மார்ச் மாதம் தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டதாகவும், அதன்பேரில் ஆணையம் 23102025 அன்று மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் (எண்: 408/D5/2025) அனுப்பி, 22122025க்குள் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள்குறித்துஅறிக்கை அளிக்க உத்தரவிட்டதாகவும் சங்கர் தெரிவித்தார்.

நடவடிக்கை இன்றியமைவு மற்றும் எதிர்ப்புத் தீர்மானம் அத்தகைய உத்தரவுக்கு பிறகும் இது வரை எந்த தீர்வும் எடுக்கப்படாதது குறித்து சங்கர் கடுமையான அதிருப்தி தெரிவித்தார். தொடர்ச்சியாக நடைபெறும் இந்த அலட்சியம் மற்றும் தாமதம் காரணமாக, பாதிக்கப்பட்ட தலித் மக்கள் மற்றும் உள்ளூர் குடியிருப்பாளர்களுடன் இணைந்து தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் முன்பாக டிசம்பர் 15ஆம் தேதி மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பூசாரிப்பாளையம் பகுதி மக்கள், சமூக அமைப்புகள், காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் பெருமளவில் பங்கேற்கவுள்ளனர். அரசு உடனடியாக தலையிட்டு வழித்தடத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்திட நடவடிக்கை எடுக்காவிட்டால், போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்றும் சங்கர் எச்சரித்தார்.

பொதுமக்களின் நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு காண மாநில அரசு உடனடியாக தலையிட்டு, வழித்தடத்தை திறக்க தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நிர்வாகத்தை உத்தரவிடக்கோரி வேண்டும் எனவும், சமூக நீதியை மதித்து மக்களின் குடியுரிமை உறுதிசெய்யப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.



# அம்பலூர் ஊராட்சியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு!

வாணியம்பாடி டிச.13

திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அடுத்த .அம்பலூர் ஊராட்சியில் பிளாஸ்டிக் ஒழிக்க வேண்டும் மற்றும் போதை இல்லாத மாநிலமாக உருவாக்க வேண்டும் என்று விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஊராட்சி மன்றத் தலைவர் மேற்கொண்டார்.

திருப்பத்தூர் அடுத்த தூய நெஞ்ச கல்லூரி மாணவர்கள் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.பி.முருகேசன் தலைமையில் போதைப்பொருள் மற்றும் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தி மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.இதில் ஊராட்சி செயலாளர்,ஊர் முக்கியஸ்தர்கள் மற்றும் மாணவர்களின் ஒருங்கிணைப்பாளர்கள் வீரராகவன், கமலேஷ்வரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். அனைவரும் பிளாஸ்டிக்கை உபயோகிக்க கூடாது மற்றும் வீட்டுக்கு ஒரு மரம் கண்டிப்பாக வளர்ப்போம் என்றும் உறுதிமொழியோடு ஊராட்சி மன்ற தலைவர் முருகேசன் மரக்கன்றுகளை நடும் பணியை செய்தார். பின்னர்அனைவருக்கும்மஞ்சாபைகொடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# வாணியம்பாடி அருகே அடிப்படை வசதிகளை செய்து தரக்கோரி பகுதி மக்கள் சாலை மறியல் போராட்டம்!

வாணியம்பாடி, டிச.13

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த செட்டியப்பனூர் ஊராட்சி கரிமாபாத் பகுதியில் சுமார் ஆயிரம் குடும்பங்கள் வசித்து வருகின்றன.

அப்பகுதியில் இதுவரை கழிவுநீர் கால்வாய் வசதி, சாலை வசதி,, மின்சார வசதி, தூய்மையான குடிநீர், நியாய விலை கடை,துவக்கப்பள்ளிஎனஎதுவும்செய்து தரப்படவில்லை.

மேலும் குப்பைகள் சரிவர அள்ளுவதில்லை. இதனால் ஆங்காங்கே குப்பைகளை எடுக்காமல் உள்ளதாகவும், இரவு நேரங்களில் மின்விளக்கு சரியாக எரியாததால் அருகில் உள்ள கானாற்றிலிருந்து விஷ பூச்சிகள் நடமாட்டம் அதிகமாக உள்ளது. இது குறித்து பல முறை உயர் அதிகாரிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை வைத்தும் இது வரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த பகுதி மக்கள் அடிப்படை வசதிகள் செய்து தர கோரி வாகனங்களை சிறைப்பிடித்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த ஊராட்சி செயலாளர் கணபதி போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்த முயன்ற போது போராட்டம் நடக்கும் இடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சியர் நேரில் வரும் வரை போராட்டத்தை கைவிட மாட்டோம் என்று கூறி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து கிராமிய காவல் ஆய்வாளர் பேபி தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்ததின் பேரில் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேலாக பரபரப்பு சூழல் காணப்பட்டது.



புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட

# தமிழக பளுதூக்கும் அணி தேசிய அளவிலான போட்டியில் 2 ம் இடம்!

## முதன்மைக்கல்வி அலுவலர் சண்முகம் பாராட்டு!!

புதுக்கோட்டை,டிச,13

17 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான 69 வது தேசி ய அளவிலான பளுதூக்கும் போட்டியானது அருணாசலபிர தேச தலைநகர் இடாநகரில் ஒரு வாரம் நடைபெற்றது.

இப்போட்டிக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து தமிழக அணி தேர்வு செய்யப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நடைபெற் ற இப்போட்டியில் 1 தங்கம், 1 வெள்ளி, 3 வெண்கலம் ஆகிய 5 பதக்கங்கள் பெற்று மாணவிகள் சாம்பியன்ஷிப்பில் இரண் டாம் இடமும், ஒட்டு மொத்த மாணவ, மாணவிகளுக்கான சா ம்பியன்ஷிப்பில் இரண்டாம் இடமும் பெற்று தமிழக அணி பெருமை சேர்த்துள்ளது.

பின்னர் தமிழக பளுதூக்கும் அணியினரை அழைத்து சென் ற உடற்கல்வி இயக்குநர் ராகேஷ், உடற்கல்வி ஆசிரியர்கள் பிரமிளா, கலையரசி ஆகியோர் முதன்மைக்கல்வி அலுவலர் கூ.சண்முகம் அவர்களிடம் கோப்பைகளை காண்பித்தனர்.

அதனைத்தொடர்ந்து தேசிய அளவிலான பளுதூக்கும் போ ட்டியில் புதுக்கோட்டை மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட தமி ழக அணி சாதனை படைத்தமைக்காக முதன்மைக்கல்வி அ லுவலர் வாழ்த்தும், பாராட்டும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் புதுக்கோட்டை மாவட்டக்கல்வி அலுவலர் ஆரோக்கியராஜ், மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் தங்கராஜ், பள்ளித்துணை ஆய்வாளர் குருமாரிமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

# "கோவை பாரதியார் பல்கலைக்கழக பதிவாளரை நீக்கக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம்"!

கோவை டிச.13

கோவையில் செயல்பட்டு வரும் பாரதியார் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் ராஜவேல் அவர்கள் பல்கலைக்கழக விதிகளை மீறி செயல்படுவதாகவும், பேராசிரியர்களின் பதவி உயர்வுக்கு தடையாக இருப்பதாகவும், பட்டியலின சமூக பேராசிரியை மிரட்டல் விடுத்ததாகவும், மாவட்ட



ஆட்சியரிடம் காவல் ஆணையரிடமும் புகார் மனு அளிக்கப்பட்டது. மேலும் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க கோரி தமிழ்நாடு தேவேந்திர குல மத்திய மாநில அரசு ஊழியர் சங்கம் சார்பில் கோவை தெற்கு தாசில்தார் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் நடைபெறும் பல்வேறு முறைகேடுகள் குறித்து, அதை தடுக்க கோரியும், கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தனர். இதில் தமிழ்நாடு தேவேந்திர குல மத்திய மாநில அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# SIR ஐ கண்டு மு.க. ஸ்டாலின் ஆட்டம் கண்டு, பதறி போய் உள்ளார்!

## முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி கடும் விமர்சனம்!!

திருப்பத்தூர் டிச.13

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் உள்ள தனியார் மண்டபத்தில் அதிமுக மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் கழக வளர்ச்சி மற்றும் தேர்தல் பணி குறித்த கூட்டம் நடைபெற்றது . இதில் மாவட்ட செயலாளர் விக்னேஷ்வரன் தலைமை வகித்தார். இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே. சி. வீரமணி மற்றும் மாநில இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை



செயலாளர் டாக்டர் பரமசிவம் கலந்து கொண்டு கொண்டனர். இந்த கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி பேசியதாவது,

தமிழகத்தில் கருணாநிதி தொடங்கி அவரது மகன் மு.க. ஸ்டாலின் வரை கள்ள ஓட்டு போட்டு தான் ஆட்சியை பிடித்தனர். தற்போது SIRயை கண்டு மு.க. ஸ்டாலின் ஆட்டம் கண்டு பதறி போய் உள்ளார். எனவே தமிழகத்தில் 2026யில் மீண்டும் புரட்சித்தலைவர் மற்றும் அம்மாவின் ஆட்சி எடப்பாடியார் தலைமையில் அமையும் என முன்னாள் அமைச்சர் கே.சி. வீரமணி தெரிவித்தார். பின்னர் பேசிய இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாநில செயலாளர் டாக்டர். பரமசிவம் பேசுகையில் தவெக கட்சியின்தலைவர்விஜய் மக்களின்அடிப்படைபிரச்சனைகளை கூட தெரியாமல் ஆட்சியை பிடிப்பேன் என கூறி வருவது கேலி கூற்றாகும் என கடுமையாக சாடினார்.



மாநில அளவிலான வெல்லும் தமிழ் பெண்கள் தேர்வு முகாமில் கலந்து கொள்ள செல்லும் பல்வேறு திட்ட பயனாளிகளோடு கலெக்டர் இளம்பகவத் கலந்துரையாடினார். உடன் மகளிர் திட்ட இயக்குனர் நாகராஜன், உதவி திட்ட அலுவலர் வினோதா, வாழ்ந்து காட்டுவோம் திட்ட மாவட்ட செயல் அலுவலர் தாமோதரன் ஆகியோர் உள்ளனர்.

# கலிபோர்னியா பாதாமை எடுத்துக் கொள்ளுங்கள்; குளிர் காலத்தில் தோல் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளுங்கள்!

கோவை , டிச.13

குளிர்காலம் ரம்மியமான இரவுகளையும் பண்டிகை கால மகிழ்ச்சியையும் கொண்டு வந்தாலும், அது பலருக்கு உடல் சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளையும் கொண்டு வருகிறது: அவற்றில் ஒன்று தோல் வறட்சி, பொலிவிழந்த தோல் மற்றும் உணர்திறன் பிரச்சினை ஆகியவையும் ஏற்படுகிறது. இந்த



நிலையில் எல்லா காலத்திலும் நமது தோலை மிகவும் பாதுகாப்பாக வைத்திருப்பதில் கலிபோர்னியா பாதாம் முக்கிய பங்கு வகிக்கிறது. அவற்றை நாம் தினந்தோறும் எடுத்துக் கொள்ளும் போது நமக்கு பல்வேறு நன்மைகள்கிடைக்கிறது என்று டெல்லி, மேக்ஸ் ஹெல்த்கேர் உணவுமுறைப் பிரிவு பிராந்திய தலைவர் ரித்திகா சமதர் தெரிவித்துள்ளார். இந்த காலங்களில் தோலின் மேற்பரப்பில் கிரீம் போன்றவற்றை பயன்படுத்தினாலும், நிலையான ஊட்டச்சத்து என்பது உடலுக்குள்இருந்தே தொடங்குகிறது. குளிர்கால தோல் பராமரிப்புக்கான மிகவும் பயனுள்ள வழி, சரியான உணவுகளின் மூலம் நமது உடலுக்கு தேவையான ஊட்டச்சத்தை வழங்குவதாகும். குளிர்காலத்தில் ஏற்படும் வறட்சி என்பது தோல் பராமரிப்பு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனை மட்டுமல்ல, அது ஊட்டச்சத்து சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையும் கூட. புரதம், ஆரோக்கியமான கொழுப்புகள், வைட்டமின் ஈ மற்றும் ஒமேகா3 நிறைந்த உணவுகளான மீன்கள் மற்றும் கலிபோர்னியா பாதாமை நாம் உணவில் சேர்த்துக்கொள்வது என்பது மிகவும் அவசியமாகிறது. உங்கள் தினசரி உணவில் பாதாமைச் சேர்ப்பது, தோலுக்கு உள்ளிருந்து ஊட்டமளித்து, கடுமையான பருவநிலைகளிலும் கூட அது மென்மையாகவும், ஈரப்பதத்துடனும், ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது. பாதாம் சரும ஆரோக்கியத்திற்குப் பல வழிகளிலும் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது. அவை நமது தோல் பாதிக்காமல் பாதுகாக்கிறது. அவற்றை நாம் வழக்கமாக எடுத்துக் கொள்ளும்போது நமது தோல் பாதுகாப்பாகவும் பளபளப்புடனும் இருக்கும் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# ஏழை எளிய மாணவர்கள் கல்வி வளர்ச்சி பெற வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்தவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## முன்னாள் அமைச்சர் பொன்முடி பெருமிதம்!!

திருக்கோவிலூர் டிச.13

விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சித்தலிங்கமடத்தில் இன்று பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது விழுப்புரம் மாவட்ட கல்வி அலுவலர் இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான பொன்மணி கலந்து கொண்டு பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி விழா சிறப்புரையாற்றினார் அப்போது பேசிய முன்னாள் அமைச்சர் பொன்முடி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கிராமங்களிலும் ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த பள்ளி மாணவர்கள் கல்வியிலும் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற அடிப்படையில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் புதுமைப்பெண் திட்டம் தமிழ் புத்தகம் திட்டம் நான் முதல்வன் திட்டம் என பல்வேறு திட்டங்களை அறிவித்து மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் மேலும் கிராமப்புற மாணவர்கள் இடைநீற்றல் இல்லாமல் உயர்கல்வி பயில வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு இடங்களில் கல்லூரிகளை தொடங்கி சிறப்பாக செயல்பட்டு வருவதாக பெருமிதம் தெரிவித்தார் பின்னர் செய்தியாளரை சந்தித்த அவர் தமிழகத்தில் அதிமுக ஆட்சிக்கு வர முடியாது என்று அவருக்கு பயம் வந்ததால்தான் இப்படி எல்லாம் பேசுகிறார்.

எடப்பாடி பழனிச்சாமி பிஜேபிக்கு அடிமையாகவே ஆகிவிட்டார் மாணவர் மாணவிகளுக்கு லேப்டாப் வழங்கும் திட்டத்தை தொடங்க உள்ளதை தோல்வி பயத்தால் தான் திமுக செய்கின்றது என எடப்பாடி பழனிச்சாமி விமர்சனத்திற்கு திமுக துணை பொது செயலாளர் பொன் முடி பதில்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கவுன்சிலர் விசுவநாதன் ஒன்றிய செயலாளர் சடகோபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் மனித உரிமைகள் உறுதிமொழியை ஏற்றுக்கொண்ட காவல்துறையினர்!

கள்ளக்குறிச்சி டிச.13

கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் G.S மாதவன் அவர்களின் உத்தரவின் பேரில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திருமால் அவர்கள் தலைமையில் மனித உரிமைகள் உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலும், இந்தியாவில் செயல்படுத்தக்தக்க பன்னாட்டு சட்டங்களிலும் வரையறுக்கப்பெற்ற மனித உரிமைகள் குறித்து உண்மையுடனும், பற்றுறுதியுடனும் நடந்து கொள்வேன் என்று நான் உளமார உறுதி மொழிகிறேன். எவ்வித வேறுபாடுமின்றி, அனைவரின் மனித உரிமைகளை மதித்து நடப்பதுடன், மனித உரிமைகளைப் பாதுகாக்கும் . வகையில், நான் என்னுடைய கடமைகளை ஆற்றுவேன். என்னுடைய எண்ணம், சொல் அல்லது செயல் மூலம், பிறருடைய மனித உரிமைகளை மீறுகிற எந்தவொரு செயலையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்ய மாட்டேன். மனித உரிமைகள் மேம்படுத்துவதற்கு, நான் எப்போதும் ஆயத்தமாக இருப்பேன் என்று உளமார உறுதி கூறுகிறேன். என உறுதிமொழி ஏற்கப்பட்டது.

இக்கூட்டத்தில் காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் மற்றும் காவல் அலுவலக அமைச்சு பணியாளர்கள் கலந்துகொண்டு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.



# புதுக்கோட்டை அருகே வாசிப்பு மன்றத்தின் சார்பில் சர்வ தேச மனித உரிமை தினம் கடைபிடிப்பு!

புதுக்கோட்டை டிச 13

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை அருகே அக்கச் சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வாசிப்பு இயக்கத்தின் சார்பில் சர்வதேச மனித உரிமைகள் தினம் கடைபிடிக்கப் பட்டது. இந்நிகழ்வில் கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை அனைவரையும் வரவேற்றார. வாசிப்பு மன்ற இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா மனித உரிமைகள் தினம் குறித்து பேசும் போது

மனித உரிமைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 10 அன்று கொண்டாடப்படுகிறது.

இது, 1948 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தை ஏற்றுக்கொ ண்ட நாளை நினைவுகூர்கிறது. 2025 இல், இது மனித உரிமை கள் பிரகடனத்தின் 77வது ஆண்டு ஆகும். மனிதர்களின் அ டிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை உலகெங்கி லும் ஊக்குவிக்கவும் பாதுகாக்கவும் கொண்டாடப்படுகிறது.

1950 ஆம் ஆண்டில் இருந்து டிசம்பர் 10 ஆம் தேதி இந்த தினத் தை அனுசரிக்க ஐக்கிய நாடுகள் சபை அனைத்து நாடுகளையும் ஒருங்கிணைத்துக் கொண்டாடி வருகிறது.

இந்த மனித உரிமைகள் தினத்தில், ஒவ்வொரு நபருக்கும் மனித உரிமைகள் எவ்வளவு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, அனைவருக்கும் நீதி, சமத்துவம், அமைதி மற்றும் சுதந்திரத்தைத் தேடுவதற்கு அவற்றை ஒவ்வொரு நாளும் நமது திசைகாட்டியாகப் பயன்படுத்துவோம் என்று பேசினார். நிறைவாக ஆங்கில ஆசிரியை சிந்தியா நன்றி கூறினார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான .பி.கே.சேகர்பாபு சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ் ரூ.32.62 கோடி மதிப்பில் தொன்மை மாறாமல் புனரமைக்கப்பட்டுள்ள விக்டோரியா பொது அரங்கத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மாண்புமிகு மேயர் மதி ஆர். பிரியா, ஆணையாளர் . ஜெ. குமரகுருபரன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டில்

# உண்ணிக் காய்ச்சலை தடுக்க வழிகாட்டு நெறிமுறைகள்!

## சுகாதாரத்துறை வெளியிட்டது!!

சென்னை, டிச.13

தமிழ்நாட்டில் உண்ணிக் காய்ச்சலை தடுக்க வழிகாட்டு நெறிமுறைகளை சுகாதாரத்துறை வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக சுகாதாரத்துறை அதிகாரிகள் கூறியதாவது:

ரிக்கட்ஸியா எனப்படும் பாக்டீரியா பாதித்த ஒட்டுண்ணிகள், பூச்சிகள், உயிரினங்கள் மனிதர்களை கடிக்கும்போது, அவர்களுக்கு ஸ்கரப்டைபஸ் காய்ச்சல் ஏற்படுகிறது. காய்ச்சல், தலைவலி, உடல் சோர்வு மற்றும் தடிப்புகள் அதன் முக்கிய அறிகுறிகளாக உள்ளன.

தமிழகத்தில் சென்னை, காஞ்சிபுரம், திருப்ப த்தூர், திருவள்ளூர், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் ஸ்கரப்டைபஸ் தொற்று பாதிப்பு இருந்து வருகிறது. இவைதவிர கிழக்கு தொடர்ச்சி மலைப்பகுதிகள், மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் ஸ்கரப்டைபஸ் தொற்று காணப்படுகிறது.

இந்நிலையில், ஆந்திர மாநிலத்தில் அந்த பாதிப்பு அதிகரித்து வருவதால் சென்னை மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நோய் பரவல் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது. இதை யடுத்து, அதற்கான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. விவசாயி கள், புதர் மண்டிய மற்றும் வனப்பகுதிகளுக்கு அருகே வசிப்பவர்கள், மலையேற்றத்தில் ஈடுபடுவோர், கர்ப்பிணிகள், பூச்சிக் கடிக்குள்ளாகும் சூழலில் இருப்போருக்கு இந்த பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

எலிஸா ரத்த பரிசோதனை மற்றும் மூலக்கூறு பரிசோதனைகள் மூலமாக இந்த நோயை கண்டறிய முடியும். ஸ்கரப் டைபஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அசித்ரோமைசின், டாக்ஸிசைக்ளின் போன்ற ஆன்ட்டிபயாடிக் மருந்துகளை அளித்து சிகிச்சை அளிக்க வேண்டும். இந்த பாதிப்புக்கு கடந்த ஆண்டில் 5,000க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நடப்பாண்டில் 4,000க்கும் அதிகமானோருக்கு பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

தற்போது, 10 முதல் 20 பேர் வரை தினமும் பாதிப்பு அறிகுறிகளுடன் மருத்துவமனைக்கு வருகின்றனர். மலைப்பகுதிகள், புதர்ப்பகுதிகள் மட்டுமின்றி சமவெளி பகுதிகளிலும் அந்த பாதிப்பு கண்டறியப்படுகிறது. இதையடுத்து தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்ட சுகாதார அதிகாரிகளுக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

# கோபி அருகே தோட்டத்தில் கஞ்சா செடி வளர்த்த பெண் கைது!

கோபி, டிச.13


கோபி அருகேகுண்டேரிப்பள்ளம் டேம் அருகில் புறம்போக்கு நிலத்தில் கஞ்சா செடிகளை விளைவித்து விற்பனை செய்யப்படுவதாக கோபி மதுவிலக்கு போலீசாருக்கு தகவல் கிடைத்தது. உடனே எஸ்எஸ்ஐ. சரவணன் தலைமையிலான போலீஸ் குழுவினர் அங்கு சென்று கோபி அடுத்த பங்களாப்புதூர் போலீஸ் சரகத்திற்குட்பட்ட கொங்கர் பாளையம், பாப்பாங் காட்டுதோட்டத்தைச்சேர்ந்த ஆறுமுகம் மனைவி தேவி (57)என்பவரை பிடித்து விசாரணை செய்தனர்.



விசாரணையில் அவர் குண்டேரிப்பள் ளம் டேம் அருகில் புறம்போக்கு நிலத்தில் கஞ்சா செடிகளை பயிரிட்டு விற்பனை செய்வதை ஒப்புக் கொண்டார். அவரை கோபி மதுவிலக்கு போலீசார் கைது செய்து அவரிடமிருந்த 16 கஞ்சா செடிகள் மற்றும் 2 கிலோ கஞ்சா ஆகியவற்றை பறிமுதல் செய்தனர்



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் வைப்பறையிலிருந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை விருதுநகர் மாவட்டத்திற்கு அனுப்பி வைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படுவதை மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கோதை ஆய்வு செய்தார்.



கர்நாடக அணையில் இருந்து வெளியேற்றப்படும் உபரி நீர் குறைந்ததால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது. இதனால் பரிசல் சவாரிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

### கஞ்சா கடத்தல் வழக்கில்

# 2 பேருக்கு 5 ஆண்டு சிறைத் தண்டனை!

கோவை, டிச.13

கோவை ரெயில் நிலையத்துக்கு கடந்த 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20 ந் தேதி வந்த ஒரு ரெயிலில் இருந்து 2 பேர் பைகளுடன் இறங்கினர், அப்போது சந்தேகத்தின் பேரில் அவர்களிடம் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் விசாரணை நடத்தினர்,

இதில்அவர்கள் முன்னுக்குப் பின் முரணாக பதிலளித்தனர் இதனால் போலீசார் அவர்கள் வைத்திருந்த பையை சோதனை செய்தனர். அதில் இரண்டு பேரிடமும் தலா ஐந்து கிலோ கஞ்சா இருந்ததுரெயிலில் கஞ்சாவை கடத்தி வந்து கோவையில் விற்பனை செய்ய முயன்றது தெரிய வந்தது.

இதனைத் தொடர்ந்து கஞ்சாவை பறிமுதல் செய்து போலீசார்விசாரணைநடத்தியபோதுபிடிபட்டவர்கள் ரவிக்குமார் ( வயது22 ), பெலிக்ஸ் ( வயது 21 )என்றும் கோவை சிட்கோ பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் தெரிய வந்தது இதைத் தொடர்ந்து இரண்டு பேரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர், இந்த வழக்கு விசாரணை கோவை போதைப் பொருள் தடுப்புப்பிரிவு கோர்ட்டில் நடைபெற்று வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதி ராஜலிங்கம் குற்றம் சாட்டப்பட்ட ரவிக்குமார், பெலிக்ஸ் ஆகியோருக்கு ஐந்து ஆண்டு சிறைத்தண்டனையும், ரூ.25 ஆயிரம் அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

# காரமடை அருகே மாமனார் மீது தாக்குதல்; மருமகன் கைது!

கோவை, டிச.13

காரமடை அடுத்துள்ள திம்மம்பாளையம் பகுதியை சேர்ந்தவர் நாகராஜன்(55).டிரைவராக பணிபுரிந்து வருகிறார். இவரது மகள் சிந்துஜா(35).சிந்துஜாவின் கணவர் வெள்ளியங்கிரி(38).

சிந்துஜா வெள்ளியங்கிரி தம்பதி காந்தி நகர் பகுதியில் வசித்து வருகின்றனர்.

இதனிடையே வெள்ளியங்கிரி மது பழக்கத்திற்கு அடிமையானதாக கூறப்படுகிறது.இதனால் கணவன், மனைவிக்கிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதேபோல் சில தினங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தகராறு காரணமாக மனைவி சிந்துஜா கணவரை விட்டு பிரிந்து தனது தந்தை நாகராஜன் வீட்டில் வசித்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு மது போதையில் மாமனார் வீட்டிற்கு சென்ற வெள்ளியங்கிரி மனைவி சிந்துஜாவை குடும்பம் நடத்த அழைத்துள்ளார்.அதற்கு மனைவி மறுத்துள்ளார்.இதனால் ஆத்திரமடைந்த வெள்ளியங்கிரி சிந்துஜாவுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

இதனை மாமனார் நாகராஜன் கண்டித்துள்ளார்.ஆத்திரமடைந்த வெள்ளியங்கிரி மாமனார் நாகராஜனை கடுமையாக தாக்கியுள்ளார்.

இதில் காயமடைந்த நாகராஜன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பின்னர் இதுகுறித்து காரமடை போலீசில் புகார் அளித்துள்ளார்.

புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த காரமடை போலீசார் வெள்ளியங்கிரியை நேற்று கைது செய்தனர். தொடர்ந்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# கோபி அருகே வாலிபர் தூக்குப் போட்டு தற்கொலை!

கோபி டிச13

கோபிஅருகே. கள்ளிப்பட்டி சேர்ந்தவர் சாமிநாதன். 35.கட்டிட வேலை. செய்து வருகிறர் இவருக்குமனைவி சத்யா மகள் ஶ்ரீ பிரதிக்ஷா மகன் நிதினேஷ் உள்ளனர். சாமிநாதன் கள்ளிப்பட்டி கிராமம் ஈஸ்வரன் என்பவருடைய சிமெண்ட் சீட் வீட்டில் வாடகைக்கு இருந்து வருகிறார்.இவருக்கு கடன் பிரச்சனை இருந்து வந்துள்ளது. அதன்காரணமாக இன்று வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் அவருடைய சமையல் அறையில் கயிற்றால் தனக்குத்தானே தூக்கு மாட்டி இறந்துள்ளார்.

அவருடைய மகன் பள்ளிக்குச் சென்று விட்டு வீட்டிற்கு வந்து பார்க்கும் பொழுது அவருடைய அப்பா தூக்கு மாட்டி இருப்பதை பார்த்து சத்தம் போட அருகில் இருந்தவர்கள் சாமிநாதனை கீழே இறக்கி பார்க்கும்பொழுது இறந்துள்ளார்.

இதுகுறித்து பங்களா புதூர் போலீசில் புகார் கொடுத்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வெறிநாய்கள் கடித்து 6 ஆடுகள் பலி!

திருப்பூர்,டிச.13

காங்கேயம்: திருப்பூர் மாவட்டம், முத்தூர் அமராவதிபாளையம், காரகாட்டுதோட்டத்தை சேர்ந்த முத்தப்பன், 65, விவசாயி, இவர் தனது தோட்டத்தில், 11 செம்மறி ஆடுகளை வளர்த்து விவசாயம் செய்து வருகிறார். நேற்று முன்தினம் தோட்டத்தில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது, கம்பி வேலியில் புகுந்த வெறி நாய்கள் ஆடுகளை கடித்தன. இதில் ஆறு ஆடுகள் உயிரிழந்தன.

மூன்று ஆடுகளுக்கு படுகாயம் ஏற்பட்டது. மேட்டுப்பாளையம் வி.ஏ.ஓ., ராமச்சந்திரன், கால்நடை மருத்துவர் பெருமாள் ஆகியோர் இறந்த ஆடுகளுக்கு பிரேத பரிசோதனை செய்து, காயமடைந்த ஆடுகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

# போதை பொருட்களை கடத்தி வந்த 145 வாகனங்கள் விரைவில் ஏலம்!

ஈரோடு,டிச.13

ஈரோடு மாவட்டத் தில், போதை பொருட்களை கடத்தி வந்ததாக போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்ட, 145 வாகனங்கள் விரைவில் ஏலத்தில் விடப்பட

உள்ளது.ஈரோடு மாவட்டத்தில் போதை பொருட்களை கடத்தி, விற்க வந்ததாக ஈரோடு மாவட்ட மதுவிலக்கு மற்றும் சட்டம் ஒழுங்கு போலீசாரால் இதுவரை, 129 டூவீலர்கள், 16 நான்கு சக்கர வாகனங்கள் என மொத்தம், 145 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. ஈரோடு ஆணைக்கல்பாளையம் ஆயுதப்படை வளாகத்தில் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வாகனங்களை பொது ஏலம் விடுவதற்கான பணிகள் நடந்து வருகிறது.

அரசு மோட்டார் வாகன பிரிவு அதிகாரிகள், நேற்று வாகனங்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் பணியை மேற்கொண்டனர். எனவே விரைவில் ஏலம் விடுவதற்கானஅறிவிப்பு வெளியாகும்.




பவானிசாகர் சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழகத்தின் ஆலோசனைக் கூட்டம் சத்தியமங்கலம் தனியார் திருமண மண்டபத்தில் மாவட்டச் செயலாளர் பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சர், தமிழக வெற்றி கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் கலந்து கொண்டு தொண்டர்கள் மத்தியில் பேசினார் . அருகில் முன்னாள் எம் பி. சத்தியபாமா, முன்னாள் மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் எஸ். ஆர். செல்வம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் சத்யா சிவராஜ், எஸ். எம். சரவணன், மற்றும் தமிழ் செல்வி, பவுல்ராஜ்,ஶ்ரீதர் சத்தியமங்கலம் நகர ஒன்றிய நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



ஈரோடு கலெக்டர் கந்தசாமி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திரக்கிடங்கு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் முதல்நிலை சரிபார்ப்பு பணிக்கு முன் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக கிடங்கு திறக்கப்பட்டது.



# அதிக ஒலி எழுப்பும் ஏர் ஹாரன்கள்; தனியார் பேருந்துகளுக்கு அபராதம்!

மேட்டுப்பாளையம்,டிச.13

பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களில் அதிக ஒலி எழுப்பும் 'ஏர் ஹாரன்' எனப்படும் ஒலிப்பான்களை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இவற்றை வாகனங்களில் பொருத்தி பயன்படுத்துவோர் மீது போக்குவரத்து காவல்துறையினர் மற்றும் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து அகற்றி வருவதோடு அபராதமும் விதித்து வருகின்றனர்.

இருப்பினும் பல தனியார் மற்றும் அரசு பேருந்துகளிலும் விதிகளை பின்பற்றாமல் தடையை மீறி ஏர் ஹாரன்களை பொருத்தி சாலைகளில் அலற விட்டு சாலையில் செல்வோரை அச்சத்தில் ஆழ்த்துகின்றனர்.

இதனால் அவ்வப்போது சாலை விபத்துக்களும் நேர்ந்து வருகின்றன.

இதனை தடுக்கும் வகையில் நேற்று மேட்டுப்பாளையம் பேருந்து நிலையத்தில் தனியார் மற்றும் அரசு பேருந்துகளில் வட்டார போக்குவரத்து அலுவலர் சத்தியகுமார் தலைமையிலான குழுவினர் ஏர் ஹாரன்கள் பொருத்தப்பட்டிருக்கிறதா?என ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வின் போது அதிக ஒலி எழுப்பும் ஏர் ஹாரன்களை பொருத்தியிருந்த 5 தனியார் பேருந்துகளில் இருந்து அவற்றை அகற்றி பறிமுதல் செய்தனர். மேலும், தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் வீதம் மொத்தமாக ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்தனர்.

மேலும், அடிக்கடி இதுபோன்று ஆய்வு நடத்தப்படும்.

அடுத்த முறை மீண்டும் இதேபோன்று ஏர் ஹாரன்கள் பயன்படுத்துவது தெரிய வந்தால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என பேருந்து ஓட்டுநர்களுக்கு வட்டார போக்குவரத்து அலுவலர்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

# காரமடையில் அரசு ஊழியரிடம் லேப்டாப் திருட்டு!

## இரு மாதங்களுக்கு பின் இளைஞர் கைது!!

காரமடை, டிச.13

கோவை பீளமேடு பி.ஆர்.ஜி.நகர் பகுதியை சேர்ந்தவர் சத்தியசீலன்(47). இவர் நீலகிரி மாவட்டம் ஊட்டியில் அரசு ஊழியராக பணிபுரிந்து வருகிறார்.இந்நிலையில் இவர் கடந்த அக்டோபர் மாதம் ஊட்டிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மீண்டும் மேட்டுப்பாளையம் வந்து கோவைக்கு அரசு பேருந்தில் பயணித்துள்ளார்.



அப்போது,தனது லேப்டாப் பேக்கை பொருட்கள் வைக்கும் இடத்தில் வைத்துவிட்டு இருக்கையில் அமர்ந்துள்ளார். இதனிடையேகாரமடைகார்ஸ்டாண்ட் அருகே பேருந்தில் ஏறிய இளைஞர் ஒருவர்அவர்கள்லேப்டாப்பைதிருடிவிட்டு கண்ணார்பாளையம்சந்திப்பில்இறங்கி சென்று விட்டார்.

சற்றுநேரத்தில் சத்தியசீலன் தனது லேப்டாப் திருட்டு போனதை அறிந்த சத்தியசீலன்

இதுகுறித்து காரமடை காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார்.இதன்பேரில் காரமடை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர். இந்நிலையில் இரு மாதங்களாக பல்வேறு கட்ட விசாரணைக்கு பின்னர் சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் தோலம்பாளையம் புதூர் பகுதியைசேர்ந்தபூபதி(35) என்பவர் சத்தியசீலனின் லேப்டாப்பை திருடி சென்றதை போலீசார் கண்டறிந்தனர். இதனை தொடர்ந்து நேற்று அவரை கைது செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.



இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு கிடங்கில் வைக்கப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் முதற்கட்ட சரிபார்ப்புப் பணி மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், தலைமையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் தொடங்கி நடைபெற்றது. இந்நிகழ்வின்போது, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/இணை ஆணையாளர் (கல்வி) க. கற்பகம், மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அலுவலர்கள் உடனிருந்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு118ல் தனியார் மருத்துவமனை கட்டுமானப் பணிகளுக்காக சாலையில் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் வைக்கப்பட்டிருந்த கண்டெயினரை மாநகராட்சி அலுவலர்கள் அப்புறப்படுத்தி இந்த கட்டுமான நிறுவனத்திற்கு ரூ.1 இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டது. மேலும், சுத்தமான மற்றும் பாதுகாப்பான கட்டுமானம் குறித்த வழிகாட்டுதல்களை பின்பற்றாமல் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படுவதையொட்டி ரூ.5 இலட்சம் அபராதத்திற்கான நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

# 16 வயது பேத்தியை பாலியல் பலாத்காரம் செய்த முதியவருக்கு ஆயுள் தண்டனை!

## மகிளா கோர்ட்டு தீர்ப்பு!!

ஊட்டி, டிச.13

நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகேயுள்ள கிராமத்தை சேர்ந்த 16 வயது சிறுமி தனது தாய், தம்பி ஆகியோருடன் தனது தாயின் பெற்றோர் வீட்டில் வசித்து வந்துள்ளார். இந்தநிலையில் கடந்த ஏப்ரல் மாதம் 16ந் தேதியன்று சிறுமிக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்ட நிலையில் சிறுமியின் தாயார் அவரை குன்னூரில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளார். அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் கர்ப்பமாக இருப்பதாக கூறினர். வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் சிறுமியின் தாத்தாவை அவரை பாலியல் பலாத்காரம் செய்தது தெரியவந்தது.

இது குறித்து மருத்துவமனை நிர்வாகத்தினர் குழந்தைகள் நல அலுவலர்களுக்கும் போலீசாருக்கும் தகவல் தெரிவித்தனர்.

இதுகுறித்து குன்னூர் அனைத்து மகளிர் போலீசார் விசாரணை நடத்தி போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து சிறுமியின் தாத்தாவான 75 வயது முதியவரை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை ஊட்டி மகிளா கோர்ட்டில் நடைபெற்று வந்தது நேற்று இந்த வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது.

இதில் சிறுமியின் தாத்தா மீதான குற்றச்சாட்டு உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து அவருக்கு 20 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.15 ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி எம்.செந்தில்குமார் தீர்ப்பளித்தார். மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ரூ.3 லட்சம் நிவாரண நிதியை தமிழக அரசிடம் இருந்து பெற்று வழங்க மாவட்ட கலெக்டருக்கு உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் அரசு தரப்பில் வக்கீல் பி.செந்தில்குமார் ஆஜராகி வாதாடினார். இதைத்தொடர்ந்து சிறுமியின் தாத்தா கோவை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

## ஈரோட்டில்

# இலவச வீட்டு மனை, அரசு வேலை வாங்கி தருவதாக பண மோசடி!

ஈரோடு, டிச.13

தாய்நாடு முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் ஆர்.லோகநாதன், ஈரோடு மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் ஒன்றை அளித்தார். அதில் அவர் தெரிவித்து இருப்பதாவது...

திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சின்னசாமி என்பவர் அன்பு மகேசு என பெயரை மாற்றி திராவிடர் விடுதலை கட்சி தலைவர் என கூறி ஈரோடு மாவட்டத்தில் ஆளும் கட்சி பிரமுகர்களுடன் ஒன்றாக நின்று போட்டோ எடுத்து, அதனை சமூக வலைதளங்களில் பதிவிட்டு, ஆளும் கட்சியின் ஆதரவுடன் அரசு வீடு, நிலம், அரசு வேலை வாங்கி தருவதாக பொது மக்கள் பலரிடம் லட்சக் கணக்கில் பணம் வசூல் செய்து, மோசடி செய்து வருகிறார்.

இரு குறித்து பல புகார்கள் காவல் நிலையத்தில் விசாரணையில் உள்ளது. இந்த மோசடி நபர் ஏற்கனவே திருப்பூர் மாவட்டத்தில் அரசு நிலம் வாங்கி தருவதாகவும், அரசு அதிகாரிகளின் மூலம் DTCP அப்ரூவல் வாங்கி தருவதாகவும் லட்சக் கணக்கில் பணம் ஏமாற்றி வந்துள்ளார்.

தற்போது அதே பாணியில் ஈரோடு மாவட்ட மக்களிடமும் மோசடி செய்து வருவதால் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் பொருட்டுகாவல்நிலையத்தைஅணுக, எனது கட்சியின் சார்பாக வழிகாட்டியதை அறிந்து அன்பு மகேசு எனும் இந்த மோசடி நபர் எனக்கு போன் மூலமாக கொலை மிரட்டல் விடுகிறார். ஆதலால் அவரை கைது செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன் என புகார் மனு அளித்துள்ளார்.

சொந்த வீடு இல்லாத மக்களுக்கு, தமிழக அரசின் இலவச வீட்டுமனை பட்டா வாங்கித் தருவதாக கூறி பணம் வாங்கி மோசடி செய்ததாகவும், இவர் மீது ஏற்கனவே பல புகார்கள் வந்த நிலையில், அவர் மீது தொடர்ந்து புகார்கள் வருவதால் அவரை நம்பி பணம் கொடுத்த இன்னும் பலர் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.



கோவை சரவணம்பட்டி கீரணத்தம் செல்லும் சாலையில் உள்ள நல்லுசாமி அப்பர் குட்டை நீரில் இரண்டு யானைகள் ஒரு குட்டி யானையுடன் உள்ளதை படத்தில் காணலாம்.

# ஆயுதப்படை போலீஸ்காரருக்கு 10 ஆண்டு சிறை தண்டனை!

தர்மபுரி, டிச. 13

தர்மபுரி ஆயுதப் படையில் போலீஸ்காரராக பணிபுரிந்து வந்தவர் வீரமணி (45). இவருடைய மனைவி பிரேமா (43). இவரும் போலீஸ்காரராக பணிபுரிந்து வந்தார். இந்த நிலையில் கடந்த 2017ம் ஆண்டு கணவன் மனைவியிடையே குடும்ப தகராறு ஏற்பட்டது. அப்போது கோபமடைந்த வீரமணி, பிரேமாவை தாக்கியுள்ளார். அப்போது பிரேமாவின் தலையில் காயம் ஏற்பட்டது. இதனால் அவருடைய சுயநினைவு பாதிக்கப்பட்டது. இதனால் வழக்கமான பணிகளை செய்ய முடியாமல் அவர் பாதிக்கப்பட்டார். இது தொடர்பாக கொடுக்கப்பட்ட புகாரின் பேரில் தர்மபுரி டவுன் போலீசார், வீரமணி மீது கொலை முயற்சி வழக்குப்பதிந்து அவரை கைது செய்து விசாரணை நடத்தினார்கள். இந்த வழக்கு தர்மபுரி மாவட்ட விரைவு மகளிர் கோர்ட்டில் நடைபெற்றது. வழக்கு விசாரணையின் முடிவில் வீரமணி மீதான குற்றச்சாட்டு உறுதியானது.

இதனால் வீரமணிக்கு 10 ஆண்டு ஜெயில் தண்டனை மற்றும் ரூ. 20 ஆயிரம் அபராதம் விதித்து நீதிபதி அசின் பானு தீர்ப்பளித்தார்.

# மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் ஈரோட்டில் இன்று பாரதி விழா!

ஈரோடு,டிச.13

மக்கள் சிந்தனைப் பேரவை சார்பில் 28 ஆம் ஆண்டு பாரதி விழா ஈரோட்டில் இன்று மாலைநடைபெற உள்ளது.

ஈரோடு சம்பத் நகர் கொங்கு கலையரங்கில்இன்று மாலை நடைபெறும் இந்த விழாவில், பாரதி விருது வழங்குதல், மறைந்த தமிழ் ஆளுமையின் படத்திறப்பு, சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இதில், 2025 ஆம் ஆண்டுக்கான பாரதி விருது தொல்லியல் அறிஞர் கா.ராஜனுக்கு வழங்கப்படவுள்ளது. விருதினை வழங்கி 'சரித்திரத் தேர்ச்சிகொள்' என்ற தலைப்பில் தமிழக அரசின் முன்னாள் தலைமைச் செயலாளர் இறையன்பு சிறப்புரையாற்றுகிறார். ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி மறைந்த கல்வியாளர் நெ.து.சுந்தரவடிவேலு உருவப்படத்தைத்திறந்துவைத்து உரையாற்றவுள்ளார். முன்னதாக ஈரோடு கருங்கல்பாளையம் நூலகத்திலிருந்து மாலை 4 மணிக்கு நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பாரதி ஜோதி ஏந்தி அணிவகுத்து விழா நடைபெறும் கொங்கு கலையரங்கம் வந்தடைவர்.

பாரதி ஜோதி அணிவகுப்பை முதன்மைக் கல்வி அலுவலர் இ.மான்விழி தொடக்கிவைத்துப் பேச உள்ளார்.

விருதாளர் தொல்லியல் அறிஞர் கா.ராஜன் ஏற்புரையாற்றுகிறார். விழாவுக்கு, தேசிய நல விழிப்புணர்வு இயக்கத்தின் தலைவர் எஸ்கேஎம்.மயிலானந்தன் தலைமை வகிக்கிறார். மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த. ஸ்டாலின் குணசேகரன் விழாவை ஒருங்கிணைப்பதுடன் அறிமுகவுரை நிகழ்த்த உள்ளார்.



தொண்டாமுத்தூர் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள் நினைவு நற்பணி மன்றம் சார்பில் பாரதியார் அவர்களின் 144 – வது ஆண்டு பிறந்தநாள் விழா நிவேதா பெண்கள் தையலக வளாகத்தில் இனிப்பு வழங்கி கொண்டாடப்பட்டது.

# கஞ்சா விற்ற வடமாநில வாலிபர்கள் கைது!

கோவை, டிச. 13

கோவை சாய்பாபா காலனி போலீசார் கோயில் மேடு பகுதியில் ரோந்து சென்று கண்காணித்து கொண்டு இருந்தனர். அப்போது அங்குள்ள காலி மைதானத்தில் சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த வடமாநில வாலிபர்களை பிடித்து விசாரணை செய்தனர். அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்ததால் போலீசார் அவர்களை சோதனை செய்தனர். அதில் அவர்களிடம் கஞ்சா இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து போலீசார் அவர்களை போலீஸ் நிலையம் அழைத்து சென்றனர்.

## அவிநாசியில்

# ரூ.12.60 லட்சத்துக்கு பருத்தி ஏலம்!

அவிநாசி,டிச.13

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற, பருத்தி ஏலத்தில் ரூ.12 லட்சத்து 60 ஆயிரத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

இந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு 17,028 கிலோ பருத்தி கொண்டு வந்திருந்தனர். இதில், டி.சி.எச்.ரகப் பருத்தி, கிலோ ரூ.80 முதல் ரூ.84.39வரையிலும், ஆர்.சி.எச்.ரகப்பருத்தி, கிலோ ரூ.70 முதல் ரூ.79 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 12லட்சத்து 60 ஆயிரத்துக்கு பருத்தி ஏல வர்த்தகம் நடைபெற்றது.

# புகையிலைப் பொருட்கள் விற்ற கடைக்கு சீல்!

அவிநாசி,டிச.13

அவிநாசி, குன்னத்தூர் அருகே தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்த கடைக்கு சீல் வைக்கப்பட்டது.

குன்னத்தூர் அருகே ஆலம்பாளையத்தில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக போலீஸôருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்துஅப்பகுதிக்குவிரைந்துசென்றுஉணவுபாதுகாப்புத் துறை அலுவலர்கள், போலீஸôர் உள்ளிட்டோர் சோதனை மேற்கொண்டனர்.

விசாரணையில் அங்கிருந்த கல்யாணி என்பவருக்கு சொந்தமானபெட்டிக்கடையில், புகையிலைப்பொருள்கள் விற்பனை செய்யப்படுவது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து, அலுவலர்கள்விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த புகையிலைப் பொருள்களை பறிமுதல் செய்து, பெட்டிக் கடைக்கு சீல் வைத்தனர்.



பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் உள்ள திடக்கழிவுகளை பயோமைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## ஈரோடு கே.கே. நகர் பகுதியில் கூடுதலாக

# ரயில்வே நுழைவு பாலம் அமைப்பது குறித்து அமைச்சர் முத்துசாமி ஆய்வு!

ஈரோடு,டிச.13

ஈரோடு கே.கே.நகர் பகுதியில் கூடுதலாக ரயில்வே நுழைவு பாலம் அமைப்பது குறித்து அமைச்சர் சு.முத்துசாமி அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு சென்னிமலை சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணி மற்றும் வாய்க்காலில் நான்குவழிப்பாலம்அமைக்கும் பணி ஆகியவற்றை அமைச்சர் சு.முத்துசாமி அதிகாரிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஈரோடு மகாராஜா திரையரங்கு அருகில் உள்ள வாய்க்காலில் நான்கு வழிப்பாலம் அமைக்கும் பணி மற்றும் சென்னிமலை சாலை, ஆவின் மாட்டு தீவன ஆலையிலிருந்து மகாராஜா திரையரங்கு வரை இருவழிச்சாலையினை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி பார்வையிட்டு பணிகளை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

## ஈரோடு பெருந்துறை அருகே

# கன்டெய்னர் லாரி மீது வேன் மோதி டிரைவர் உட்பட 2 பேர் பலி!

ஈரோடு, டிச.13

பெருந்துறை அருகே கன்டெய்னர் லாரி மீது வேன் மோதிய விபத்தில்டிரைவர் உட்பட 2 பேர் பலியானார்கள்.

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையத்தை அடுத்த கணியனூர், அவிதிபாளையம் கண்ணகி வீதியைச் சேர்ந்தவர் குமார் மகன் கோபி (34). இவர் அங்குள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் வேன் டிரைவராக வேலை செய்து வந்தார். இந்நிலையில் அந்த நிறுவனத்தில் லோடுமேன்களாக பணிபுரியும் தொழிலாளர்களான பள்ளிபாளையம், சாணார்பாளையத்தைச் சேர்ந்த சந்திரசேகர் மகன் சுதீஷ் (22), பவானி, வேதகிரிபுரம், ஜீவா நகரைச் சேர்ந்த லோகு மகன் சங்கர் (23), திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியைச் சேர்ந்த யுவராஜ் (19) ஆகியோர் சென்றனர். திருப்பூரில் பனியன் துணிக ளை ஏற்றிக் கொண்டு செவ்வாய்க்கிழமை இரவு பள்ளிபாளையத்துக்கு வந்து கொண்டிருந்தனர்.

பெருந்துறையை அடுத்த ஓலப்பாளையம் பிரிவு அருகே வந்தபோது, முன்னால் சென்று கொண்டிருந்த கன்டெய்னர் லாரியின் மீது வேன் மோதியது. இதில், வேனில் பயணம் செய்த ஓட்டுநர் கோபி, சுதீஷ், சங்கர், யுவராஜ் ஆகிய 4 பேரும் பலத்த காயமடைந்தனர். காயமடைந்த நால்வரையும் அப்பகுதியினர் மீட்டு பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு பரிசோதனைக்குப் பின்னர், கோபி, சுதீஷ் ஆகிய இருவரும் வரும் வழியிலேயே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

சங்கர், யுவராஜ் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து, பெருந்துறை போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்பில்

# மத்திய அரசு அலட்சியம் காட்டுவதாக ஈரோடு எம்.பி. பிரகாஷ் புகார்!

ஈரோடு ,டிச.13

பெண் ரயில் பயணிகளின் பாதுகாப்புக்கான திட்டங்களை உருவாக்குவதில் மத்திய அரசு அலட்சியம் காட்டுவதாக ஈரோடு எம்.பி. கே.இ.பிரகாஷ் தெரிவித்தார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்கூறியிருப்பதாவது:

24 மணி நேரத்துக்கும் மேலாக தனியாக ரயிலில் பயணிக்கும் பெண்களுக்காக செயல்படுத்தி வரும் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து ரயில்வே அமைச்சகத்திடம் நாடாளுமன்றத்தில் புதன்கிழமை கேள்வி எழுப்பினேன். இதற்கு பதில் அளித்த ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், சட்டம் ஒழுங்கு மாநில அரசின் கீழ் வருவதால் மத்திய அரசு நேரடியாக பொறுப்பேற்காது என தெரிவித்துள்ளார். ரயில்வே துறை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதற்கானகொள்கைகளைவகுத்து, திட்டங்களை செயல்படுத்தும் அதிகாரம் மத்திய அரசின் வசமே உள்ளது.

ரயில்வே பாதுகாப்பு படை மூலம் பயணிகளுக்கு பாதுகாப்பு அளிப்பதிலும் மத்திய அரசுக்கு பொறுப்பு உள்ளது. பெண்காவலர்களை மட்டும் கொண்ட மேரி சஹேலி திட்டம் வெற்றிகரமாக செயல்படுவதாகவும், தினமும் சராசரியாக 500 ரயில்களில் சுமார் 250 ரயில்வே பாதுகாப்புப் படை குழுக்கள் பணியமர்த்தப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்திய ரயில்வேயில் தினமும் 13,000க்கும் மேற்பட்ட பயணிகள் ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதில் 500 ரயில்களுக்கு மட்டும் மேரி சஹேலி திட்டம் செயல்படுத்தப்படுவதால் பெண் பயணிகள் பாதுகாப்பை எவ்வாறு உறுதிசெய்ய முடியும். உலகின் பல நாடுகளில் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அதி நவீன கண்காணிப்பு மற்றும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த எச்சரிக்கை அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில் பேருந்துகளிலேயே அந்த எச்சரிக்கை அமைப்புகளை மூன்று ஆண்டுகளுக்கு முன்பே மாநில அரசு அமல்படுத்திவிட்டது. புதிய விரிவான, நிரந்தரப் பாதுகாப்பு அமைப்புகளை அமைப்பதற்கு நிர்பயா நிதியை ரயில்வே பயன்படுத்த வேண்டும். மேலும், இந்த நிதி குறித்த முழு வெளிப்படைத்தன்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பெண் பயணிகளின் பாதுகாப்பு அமைப்பை பல மடங்கு வலுவாக்கி, அவர்கள் அச்சமின்றி பயணிக்கும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்திய செங்கல் சூளைகளுக்கு அதிகபட்சமாக ரூ.22 கோடி வரை அபராதம் விதிப்பு!

கோவை, டிச. 13

கோவை மாவட்டம் மேற்குத்தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள தடாகம் பள்ளத்தாக்கு பகுதியில் சின்னத் தடாகம், வீரபாண்டி, நஞ்சுண்டாபுரம், சோமையம்பாளையம், பன்னிமடை ஆகிய பகுதிகளில் சட்ட விரோத செங்கல் சூளைகள் செயல்பட்டு வந்தது. அங்கு மலையடிவாரம் அருகேஉள்ளஓடைகள்,நீர்வழித்தடங்களில் சட்ட விரோதமாக சுமார் 1.10 கோடி கியூபிக் மீட்டர் அளவு செம்மண் அள்ளப்பட்டதாக புகார் எழுந்தது. இதையடுத்து சட்ட விரோதமாக செயல்பட்டு வந்த 185 செங்கல் சூளைகளைமூடநீதிமன்றம்உத்தரவிட்டது.

இதையடுத்து செங்கல் சூளைகளின் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு, சூளைகள் மூடி சீல் வைக்கப்பட்டது. இதற்கிடையே செங்கல் சூளைகளால் ஏற்பட்ட பாதிப்புகளை அளவீடு செய்து அவர்களிடம் இழப்பீடு பெற சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வழக்குத் தொடர்ந்தனர். அதன்படிநிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக கனிமவளத்தை சுரண்டியதற்காக ரூ.374 கோடி, சுற்றுச்சூழல் சீர்கேடுக்காக ரூ.59 கோடி என மொத்தம் ரூ.433 கோடி அபராதம் விதிக்கப்பட்டது.இதைத்தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின்பேரில் டெல்லியைச் சேர்ந்த ஆற்றல், வளங்கள் நிறுவனத்தின் (டெரி) நிபுணர்கள் ஆய்வு செய்து ரூ.3,650 கோடி அபராதம் விதிக்கலாம் என்று மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு பரிந்துரை செய்திருந்தனர். அபராதத் தொகை குறித்து மறுபரிசீலனை செய்ய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் 3 முறை கோரிக்கை விடுத்திருந்த நிலையில், தற்போது திருத்தப்பட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.அந்த அறிக்கை விவரம் வெளியாகியிருக்கும் நிலையில், 185 செங்கல் சூளைகளுக்கும் குறைந்தபட்சம் ரூ.15.75 லட்சம் முதல் அதிகபட்சம் ரூ.22 கோடி வரை அபராதம் விதிக்கப்பட்டிருப்பதாக, வழக்கு தொடர்ந்த தடாகம் பள்ளத்தாக்கு பாதுகாப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.